**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. C.C. No.273/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-2, L.W-3 |
| Name | : Panneerselvam(Forest guard) | Defence | : |
| Father Name | : Ammasi | Court | : |
| Village | : Thanjoore Forest Office | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 56/2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.03.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் வனச்சரகத்தில் வன காப்பாளராக உள்ளேன். வழக்கு சமயத்தில் சீர்காழி வனச்சரகத்தில் வன காப்பாளராக பணிப்பரிந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 30/09/2016 அன்று காலை சுமார் 10 மணியளவில் நானும் அ.சா.1ம், வனக்காவலராக இருந்த நடேசனும் அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது தென்பாதியில் எங்கள் அலுவலகத்திலிருந்து சுமார் 20 மீட்டர் தூரத்தில் உள்ள விவேகானந்தா பள்ளி உரிமையாளரின் வீட்டு வாசலில் ஒரு சாக்குப்பையில் இரண்டு வாத்து வைத்திருந்ததை பார்த்த நானும், வனக்காவலர் நடேசனும் , ஆஜர் எதிரியை எங்கள் அலுவலகத்திற்கு அவரது இருச்சக்கர வாகனத்தில் அழைத்து சென்றோம். அவரது சாக்குப்பையில் புள்ளி மூக்கு வாத்துகள் இரண்டு வைத்திருந்ததை கண்டோம். அதனை பற்றி விசாரித்தபோது எதிரி அவரது சித்தப்பா பாபு த/பெ. ஜெயபால் என்பவர் விற்பனைக்காக தன்னிடம் கொடுத்து அனுப்பியதாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் என்னிடம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பெயரில் ஆஜர் எதிரியை அலுவலகத்தில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அ.சா.1 ஆஜர் செய்தார் .. ஆஜர் எதிரியிடமிருந்து புள்ளி மூக்கு வாத்துகள் 2 இரண்டில் ஒன்று உயிருடனும், மற்றொன்றை இறந்த நிலையில் இருந்ததையும்

எதிரி வந்த இருச்சக்கர வாகனமான TVS Phonix  Bike Red colour TN 82 6716 என்ற வாகனத்தையும் கைப்பற்று மகசரில் அ.சா. 1 கைப்பற்றினார். கைப்பற்று மகசரில் கைப்பற்றபட்ட பிடிப்பொருள்களை நீதிமன்றத்தில் படிவம் 91 மூலம் ஆஜர் செய்தோம். பின்பு நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்பேரில் உயிருடன் உள்ள பறவை பறக்க விடப்பட்டது. இறந்த பறவை பிரேத பரிசோதனை செய்ய அனுப்பப்பட்டது. பின்பு வனச்சரக அலுவலகரிடம் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று அ.சா.1 ஒப்படைத்தார். பின்பு எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினோம். என்னை வனசரகர் விசாரித்தார்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**